Kanton St. Gallen
Bildungsdepartement

**Amt für Volksschule**

## «இப்போது எது பொருந்தும்?»

### அன்பான பெற்றோர்களே

தாங்கள் பள்ளியில் என்ன கற்றிருந்தீர்கள் என்பது தங்களுக்கு இன்னும் நினைவிருக்கிறதா? தங்கள் குழந்தையிடம் அது எப்படி இருக்கிறது?
பள்ளி ஆண்டு இறுதியில் அதற்கு என்ன தெரிய முடியும், தெரிய வேண்டும் என்பது பாடத் திட்டத்தில் உள்ளது.

பல விடயங்கள் மாறிவிட்டபடியால், தொடக்கப்பள்ளியில் பாடத்திட்டம் அவ்வப்பொழுது புதுப்பிக்கப்படுகிறது. புதிது - உதாரணமாக, கணினியின் பயன்பாடு கற்றுக் கொள்ளப்பட வேண்டும். எனவே, இந்தப் பள்ளியாண்டு ஒரு புதிய பாடத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தங்களுடைய குழந்தைக்கு, தொழில் உலகில், அல்லது தொடர்கல்வியில் ஒரு வெற்றிகரமான தேவையானதைத் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும்.

பெற்றோர், பள்ளி, மற்றும் அரசு அமைப்புகளின் வெற்றிகரமான ஒருங்கிணைப்பின் மூலம் சான்க்ட் கால்லேன் மண்டலத்து குழந்தைகளும், இளைஞர்களும் உகந்த ஒரு கல்வியைப் பெறுகிறார்கள்.

**«தொடக்கப்பள்ளியின் பாடத்திட்டத்தால் நம் குழந்தைகள், இன்றைய சமுதாயத்தின் தேவைகளை வெற்றிகரமாகக் கையாளும் திறமை கொண்டவர்களாக ஆக்கப் படுகிறார்கள்»**

### தெரிந்து கொள்வது நல்லது

குழந்தைகளும், இளைஞர்களும் இது வரை கற்றுக் கொண்டிருந்த பெரும்பாலானவை தொடர்ந்தும் கற்பிக்கப்பெறும். அவை இன்னும் சரியானவையும் முக்கியமானவையும் கூட. அனல் அதில் சில மாற்றங்கள் ஏற்படுகின்றன.

- **பாடங்கள்:** புதிய பாடங்கள் சேர்க்கப்படும் அல்லது அவற்றுக்கு புதிய பெயர்கள் சூட்டப்பெறும். ஆரம்பப்பள்ளியின் 5ஆம் ஆண்டு முதல் உங்கள் குழந்தை, எடுத்துக் காட்டாக புதிய பாடமாக ஊடக-, மற்றும் கணினி அறிவியலில் கலந்து கொள்ளும்.
- **வகுப்பறையில் எழுதுதல்:** தங்களுடைய குழந்தை "ஜெர்மன் ஸ்விஸ்சின்" அடிப் படை எழுத்துருவினை அச்செழுத்திலோ அல்லது சிறு அச்செழுத்திலோ எழுதாமல், தன்னுடைய தனிப்பட்ட கையெழுத்து மூலம் எழுதக் கற்றுக் கொள்கிறது. தொடக்கப் பள்ளியின் 3ஆம் வகுப்பிலிருந்து கணினியின் விசைப்பலகையில் தட்டச்சு செய்யும் அனுபவத்தைப் பெறுகின்றது.
- **வீட்டுப்பாடம்:** தங்களுடைய பிள்ளை பள்ளிப்பாடத்தின் வீட்டுப்பாடங்களை வீட்டில் எழுதப் பயில்கின்றது. அவை பள்ளியின் ஒரு சன்னலைப்போல இருந்து, தங்களுக்கு தங்கள் பிள்ளையின் பாடத்தில் ஓர் உட்பார்வையை கொடுக்கிறது. ஆரம்பப்பள்ளியில் வெள்ளி முதல் திங்கள் வரைக்கும் வீட்டுப்பாடங்கள் ஏதும் கொடுப்பதில்லை.
- **சான்றிதழ்**: சான்றிதழ் கோப்பும், படிவங்களும் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆரம்பப்பள்ளியின் இரண்டாம் ஆண்டின் முடிவிலும் தங்கள் குழந்தைக்கு ஒவ்வோர் அரையாண்டின் முடிவிலும் ஒரு சான்றிதழ் வழங்கப்பெறும். அத்துடன் அந்தந்த ஆசிரியர் தங்களை ஒரு மதிப்பீட்டு உரையாடலுக்கு அழைப்பார்.

## பாடத்திட்டத்தில் ஒரு பார்வை

பள்ளியின் ஆரம்பத்தில் - மழலையர் பள்ளியில் - தங்கள் குழந்தை மிக எளிதாகவும், கல்விசார் அணுகுமுறையுடனும் கற்றுக் கொள்கிறது. ஆரம்பப்பள்ளி, மற்றும் மேல்மட்டத்தில் பாடத்திட்டம் வெவ்வேறு துறைகளில் பிரிக்கப்பட்டுள்ளது.




எந்தெந்த நாட்களில் எத்தனை மணிக்கு தங்கள் பிள்ளை பள்ளியில் இருக்க வேண்டும் என்பது காலஅட்டவணையில் உள்ளது. தங்களுடைய பிள்ளையின் பள்ளியிலிருந்து தாங்கள் அதனைப் பெறுவீர்கள்.

## இவ்வாறாக உங்கள் பிள்ளை கற்றுக்கொள்கிறது

தங்களுடைய குழந்தை பள்ளியில் வெவ்வேறு கருப்பொருள்களுடைய தொடர்புடன் தன்னுடைய அறிவை வளர்த்துக் கொள்கிறது. அது பலதரப்பட்ட திறமைகளை, அதாவது எழுத்துத்திறன், மற்றும் கணக்குத்திறன் போன்றவற்றைக் கற்றுக்கொள்கிறது.

தங்களுடைய குழந்தை, தான் கற்றுக்கொண்டதை பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது. உதாரண-மாக வகுப்பு தன்னை வானிலை தொடர்பாக ஈடுபடுத்திக்கொள்கிறது. பள்ளிப்பயணத்தைத் திட்ட-மிடும் போது, மாணவ மாணவிகள் எந்த நாளில் நல்லதொரு வானிலைச்சூழல் இருக்கும் என்ப-தனை முன்கூட்டியே கணிப்பதற்கு ஏதுவாக அவர்கள் கற்றதைச் செயற்படுத்த முடியும்.

தான் கற்றுக்கொண்டதை அடிக்கடி செயற்படுத்துவதன் மூலம் தங்கள் பிள்ளை தன்னம்பிக்கையு-டனும், உறுதியுடனும் முன்னோக்கிச்செல்லமுடியும். அது புதிய கருப்பொருட்களைக் கையாளும் போது, அது ஏற்கனவே கற்றிருந்ததன் மூலம் அனுகூலம் அடைய முடியும். அதனால் தங்கள் குழந்தை தகுதி வாய்ந்ததாக ஆக முடியும்.

ஆசிரியர்கள் வெவ்வேறு வழிகளில் குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் பாடங்களில் ஆதரவு நல்குகிறார்கள். அவர்கள் அதற்குப் பொருத்தமான கல்விக்கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். மாணவ மாணவிகளுக்கு ஓருந்துதல் ஏற்படும் வகையில் குழந்தைகளுடன் நல்லதொரு தொடர்பு-டனும், தம்முடைய துறைசார் அறிவுடனும் அக்கறை செலுத்துகிறார்கள்.

**«கற்றல் முந்தைய அறிவுடன் இணைக்கப்பெற்று மேம்படுத்தப்படுகிறது»**

**கூடுதலான தகவல்கள்**

- தங்களுக்கு வினாக்கள் ஏதுமிருப்பின் தங்களுடைய குழந்தையின் ஆசிரியர்களிடம் கேட்கலாம்.
- தொடக்கப்பள்ளியின் பாடத்திட்டம் பற்றிய மேலதிகமான தகவல்களுக்கு தாங்கள் www.lehrplan.sg.ch ஐப்பார்க்கவும்.